## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No.109/2020

### 11.11.2025

### P.W.2- மூவேந்திரன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவா சொத்தின் சர்வே எண்.60-20 என்றால் சரிதான். தாவா சொத்தின் வடக்கு பக்கம் திருமங்கலம் பாசன கால்வாய் உள்ளது என்றால் வண்டிப்பாதை உள்ளது, அதற்கடுத்து பட்டா நிலம் உள்ளது, அதற்கடுத்து பாசன கால்வாய் உள்ளது. மேற்படி பட்டா நிலம் சர்வே எண்.60-9சி எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதில் வீடு உள்ளது. மேற்படி பட்டா நிலம் எனக்கும், எனது சகோதரருக்கும் பாத்தியப்பட்டது. எனது தாயாரால் மேற்படி வீடு எங்களுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது. எனது தாயாருக்கு மேற்படி சர்வே எண்.60-9சியில் உள்ள இடம் எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. எனது அப்பா ராசுத்தேவருக்கு சொந்த ஊர் குருவித்துறை என்றால் சரிதான். எனது அம்மாவுக்கு சொந்த ஊர் அய்யனார்குளம் என்றால் பூர்வீகம் ஆகும். எனது அம்மாவுக்கு எத்தனை திருமணம் நடைபெற்றது என்றால் தெரியாது. எனது அப்பாவுடன் பிறந்த சகோதரர் பெயர் ராமையாத்தேவர் என்றால் தெரியாது. நான் பிறந்தது கோவில்பட்டி என்றால் எனக்கு விவரம் தெரிந்த நாள்முதல் அங்கு வசித்து வருகிறோம். எனது சகோதரர்கள் தெய்வேந்திரன் மற்றும் மகேந்திரன் ஆகியோர்கள் குருவித்துறையில் பிறந்தார்கள் என்றால் தெரியாது. அவர்கள் தகப்பனார் பெயர் ராமையாத்தேவர் என்றால் தெரியாது. ராமையாத்தேவருக்கும், எனது தகப்பனாருக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக குருவித்துறையிலிருந்து வெளியேறி வந்தார்கள் என்றால் தெரியாது. அவ்வாறு ஊரை விட்டு வந்தபோது தான் எனது தகப்பனாருக்கு பிரதிவாதி தோட்டத்தில் வேலை கொடுத்து தங்க இடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனக்கு 49 வயது ஆகிறது. எனது அம்மாவுக்கு என்ன வயது என்று தெரியாது. மேலே சொன்ன விவரங்கள் எனது தாயாருக்கு நன்றாக தெரியும், அவரை நான் சாட்சியாக அழைக்கவில்லை என்றால் அடுத்த சாட்சி அவர்தான். நான் எனக்கு சொந்தமாக விக்கிரமங்கலத்தில் ரேணுகா ஜெராக்ஸ் கடை வைத்துள்ளேன்

என்றால் சரிதான். மேற்படி ஜெராக்ஸ் கடையில் போலியாக ஆவணங்கள் தயார் செய்ததால் என் மீதும், எனது குடும்பத்தார் மீதும் குற்ற வழக்கு உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.60-9சி சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.60-9சி நிலத்திற்கும், தாவா சொத்திற்கும் இடையே சுமார் 300 அடி தூரம் இருக்கும். தாவா சொத்தில் பசுமை வீடு திட்டத்தில் வீடு கட்ட எந்த பட்டா கொடுத்தேன் என்றால் தாவா சொத்தில் எங்களது பெயரில் பட்டா கொடுக்கவில்லை. அவ்வாறு பட்டா கொடுக்காவிட்டால் மேற்படி திட்டத்தில் வீடு ஒதுக்கமாட்டார்கள் என்றால் தெரியாது. நான் குடியிருக்கும் சர்வே எண்.60-9சி யில் உள்ள வீடானது கான்கிரீட் வீடு ஆகும். மேற்படி சர்வே எண்ணில் இரண்டு வீடு உள்ளன என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தில் தாவா சொத்தில் உள்ள வீடு பாழடைந்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டில் யாரும் குடியிருக்கவில்லை என்றால் பழைய பொருட்கள் கிடக்கிறது. மேற்படி வீட்டின் மேற்கூரை முழுவதும் நீக்கப்பட்டு பாழடைந்து உள்ளது என்றால் சரிதான். அருகில் கலைஞர் வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடு உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீது வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.13ல் கண்டுள்ள லிங்கம் எனது உறவினர் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திற்கும், வழக்கு சொத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரிதான். வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் சர்வே எண்.60-9சிக்கு பாத்தியப்பட்டது என்றாலும், தாவா சொத்திற்கும், மேற்படி ஆவணங்களுக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.11.11 16:52:23 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.